ஆவல்களை ஒத்திவைத்து இதனை விவாதிக்கவேண்டும் என்று கேட்டு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்து இருந்தேன். அதன் மீது நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு).

(திரு. துரை ராமசாமி நின்றுகொண்டே இருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு அது ஏற்கப்பட்டு இருக்கிறதா நிராகரிக்கப்பட்டு இருக்கிறதா என்று எல்லாம் தெரியாமல் எப்படி நீங்கள் அதன் மீது பேசுவீர்கள். அப்படி என்றால் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எல்லோரும் கொடுத்துவிட்டு இப்படி எழுந்து பேசி விடுவதா ? (குறுக்கீடு) இல்லை, என்ன மரபு என்று தெரியவேண்டும் ? அதற்கு மட்டும் எனக்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால் அது பற்றி என்னுடைய அறையில் வந்து கேட்கவேண்டும். இன்றைக்குக் கூட ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் உட்காருங்கள். திரு. துரை ராமசாமி அவர்களும் உட்காருங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கிறேன்.

திரு. துரைராமசாமி : எங்களுக்குப்பேச வாய்ப்புத் தராததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).

(ஈ) தனியார் துறை ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை.

திரு. கோ. வீரையன் : குறிப்பாக அனைத்துப் பகுதி ஆசிரியர்களுக்கும் மாதம் 15 ரூபாய் மருத்துவப்படியாக வழங்கப்படுகிறது. ஆனால் தனியார் துறையில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு மட்டும் இது வழங்கப்படவில்லை. இதை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். அதேபோல் நகராட்சி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்று அவர்களின் ஊதியம் நகராட்சியின் மூலமாக வழங்கப்படுவதால் அது காலத்தில் கிடைப்பது இல்லை. அதை அரசு நேரடியாக வழங்கவேண்டும் என்று கோரி தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சங்கத்தின் சார்பில் இன்று ஒரு இயக்கம் நடைபெறுகிறது. இந்த

இரண்டு கோரிக்கைகள் பற்றியும் அரசு என்ன நிலை எடுத்து இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக நான் இந்த அரசிட மிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக அமைச்சர்டத்தில் நீங்கள் நேரடியாகச் சொல்லாமல் இப்படிக் கேட்டால் எந்த அளவுக்கு விளக்கம் சொல்ல முடியும். இதைக் கவன ஈர்ப்பாகக் கொடுத்து இருந்தால் அதற்குப் பதில் வாங்கித் தந்து இருக்கலாம்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீர் என்று தன்னுடைய மனதில் படுகிற அல்லது தான் அறிந்து இருக்கிற ஒரு பிரச் சினையை இந்த அவையில் எழுப்பினால் தகுந்த, நியாயமான விளக்கத்தை அமைச்சரவையின் சார்பில் நாங்கள் யாரும் தரக்கூடிய வாய்ப்பு இருக்காது. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் ஏதாவது எதிர்பாராத ஒரு சூழ்நிலையில் ஏதாவது ஒன்றைக் குறித்து கேட்க வேண்டுமானால், கேட்டால் ஏதோ முடிந்த அளவுக்கு அதுபற்றி நாங்கள் பதில் சொல்லமுடியுமே தவிர அரசின் துறைகள் ஆய்வு நடத்தி முடிவு எடுக்கவேண்டிய பிரச்சினைகள் பற்றி நாங்களே அமைச்சர்களாக எதையும் சொல்ல நேரிட்டு அதன் காரண மாக அஷ்யூரன்ஸ் என்ற நிலைமை ஏற்பட்டுவிடுமானால், அது உள்ளபடியே நாங்கள் அவையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாக இருக்காது. எனவே இப்படிப் பட்ட கருத்துக்களுக்கு உண்மை நிலைமை தெரிந்து விளக்கம் தரக்கூடிய நிலைமை இப்போது இல்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(உ) கோவை சிறையில் இருந்த முன்னாள் பஞ்சாப் முதல்வர் பாதல் வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகப்பட்டு உள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இன்றையதினம் நம் கோவை ஜெயிலி லிருந்து பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. பிரகாஷ் சிங் பாதல் அவர்களை வேறு இடத்திற்கு. . . .

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். அவர் இப்போது முதலமைச்சர் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன பிரச்சினை இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அவரை வைத்து சமாளிக்க முடியவில்லையா என்ன?